செ.வெ.எண் : 08 நாள் : 03.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டம், பெள்ளாதி அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக உருளைகிழங்கு மண்டியில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு !!!**

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், பெள்ளாதி ஊராட்சியில் கொரோனா தொற்று பரவல் காரணமாக அமைக்கப்பட்ட தற்காலிக உருளை கிழங்கு விற்பனை மைதானத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், இணை இயக்குநர் (வேளான்மை) திருமதி.சித்ராதேவி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திருமதி.புவனேஷ்வரி, வட்டாட்சியர் திருமதி.சர்மிளா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக அமல்படுத்தப்பட்ட முழு ஊரடங்கு காலத்தில் மக்களின் அன்றாட காய்கறிகள் மற்றும் பழங்கள் தேவையை பூர்த்தி செய்திடவும், விவசாயிகளின் விளைப்பொருட்கள் விற்பனையை தடையின்றி மேற்கொள்வதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள அறிவுரைப்படி பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி விவசாயிகளின் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் 4 உழவர் சந்தைகளிலும், ஏனைய நகராட்சி மற்றும் பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் 28 பகுதிகளில் விவசாயிகளின் விளைப்பொருட்களுக்கான கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு, மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அவ்வாறு செயல்படும் இவ்விற்பனை நிலையங்கள் சமூக இடைவெளியினை கடைபிடிக்கவும், முககவசம் அணிந்து கொரோனா வைரஸ்

தொற்று தடுப்பு நடைமுறைகளை தவறாது பின்பற்றவும் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சிப்பகுதியில் செயல்பட்டு வந்த காந்தி மார்கெட்டில், தினசரி நூற்றுக்கணக்கான வியாபாரிகள் நீலகிரி, மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் 500டன் வரையிலான உருளை கிழங்கினை தரம்பிரித்து பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனை செய்து வந்தநிலையில், கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக காந்தி மார்க்கெட் தற்காலிகமாக பெள்ளாதி அருகில் உள்ள திறந்தவெளி அரங்கத்திற்கு கடந்த 28.05.2021 அன்று இடமாற்றம் செய்யப்பட்டது.

அதனையடுத்து, இந்த தற்காலிக உருளைக்கிழங்கு விற்பனை மண்டியை இன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பின்னர் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்ததுடன், தொடர்ந்து ஜடையம்பாளையம் பகுதியில் உள்ள மார்க்கெட்டில், ஊட்டியிலிருந்து வரப்பெரும் காய்கறிகள் விற்பனை செய்யும் மார்க்கெட்டை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அங்கு குழுமியிருந்த வியாபாரிகள், விவசாயிகளிடம், தடுப்பூசிகள் தான் நம்மை தொற்றிலிருந்து தற்காக்கும் எனவே அனைவரும் தடுப்பூசிகளை தவறாது செலுத்திக்கொள்ளும்படியும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முன்னதாக பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், மத்தம்பாளையம் பகுதியில் காருண்யா பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்திலும், பின்னர், மேட்டுப்பாளையம் ஹிந்துஸ்தான் பல்நோக்கு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்திலும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து ஹிந்துஸ்தான் மருத்துவமனை கொரோனா சிகிச்சை மையத்திற்கு 40 ஆக்சிஜன் செறிவூட்டிகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**